09 07 2025 WEDNESDAY 6 30 PM

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திர மோடி, நமீபிய அதிபர் திருமதி. Netumbo Nandi – Ndaitwah-வை சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

- பருத்தி விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பது குறித்து, கோவையில் வரும் 11-ஆம் தேதி ஆலோசனை நடத்தவுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

- சுங்கச்சாவடி கட்டணம் தொடர்பான உயர்நீதிமன்ற உத்தரவால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு. சிவசங்கர் கூறியுள்ளார்.

- பெண்களின் பாதுகாப்பையும், மக்களின் நல்வாழ்வையும் உறுதி செய்ய திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

- ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியாவின் வருண் இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நமீபிய அதிபர் திருமதி. Netumbo Nandi – Ndaitwah வை சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், டிஜிட்டல் தொழில்நுட்பம், பாதுகாப்பு, வேளாண்மை, சுகாதாரம், கல்வி, அரியவகை கனிமங்கள் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து நமீபியா அதிபருடன் விவாதித்ததாக தெரிவித்துள்ளார்.

வர்த்தகம், எரிசக்தி, ரசாயனம் உள்ளிட்ட துறைகளில் ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் சிவிங்கி புலிகள் திட்டத்திற்கு நமீபியா அளித்து வரும் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்துக் கொண்டதாகவும் பிரதமர் அதில் தெரிவித்துள்ளார்.

இருநாட்டு குழுக்கள் அளவில் நடைபெற்ற சந்திப்பின் போது, இந்தியா – நமீபியா இடையே பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

முன்னதாக நமீபியா சென்ற பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, Windhoek- நகரில் 21 குண்டுகள் முழங்க, ராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர், திரு. நரேந்திர மோடி, அந்நகரில் உள்ள போர் வீரர்கள் நினைவுச் சின்னத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

>>>>>><<<<<<

பருத்தி விவசாயிகளின் வருவாயை அதிகரிப்பது குறித்து, கோவையில் வரும் 11-ஆம் தேதி தேசிய அளவிலான ஆலோசனைக் கூட்டம் நடத்தவுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ்சிங் சௌஹான் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தாம் பங்கேற்கவுள்ளதாக கூறியுள்ளார்.

பருத்தி சாகுபடியில் நிலவும் சவால்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்து விவசாய அமைப்புகள், விதை உற்பத்தி நிறுவனங்கள், பஞ்சாலை தொழில்துறையினர் மற்றும் ஏற்றுமதியாளர்களுடன் ஆலோசிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டிய அம்சங்கள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினர் மின்னஞ்சல் மற்றும் கட்டணமில்லா தொலைபேசி எண் வாயிலாக தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொள்ளுமாறும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

வேலூர் மாவட்டம் காட்பாடி அருகே அரும்பருத்தி பகுதியில் பாலாற்றின் குறுக்கே 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தடுப்பணையை மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் இன்று திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த தடுப்பணை மூலம் திருவலம் முதல் அம்முண்டி வரை பாலாற்றின் கரையோரம் உள்ள விளைநிலங்கள் பாசன வசதி பெறும் என்று கூறினார்.

இப்பகுதியில் உள்ள காவனூர் ஏரியிலிருந்து உபரிநீர் வெளியேறும் பாண்டியன் மதகை சீர் செய்ய 75 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள் விரைவில் தொடங்கும் என்றும் திரு. துரைமுருகன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

சுங்கச்சாவடி கட்டணம் தொடர்பாக உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவு காரணமாக பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்டம், ஏலாக்குறிச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுதொடர்பாக சட்ட வல்லுநர்களுடன் ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

அகில இந்திய அளவில் இன்று பொது வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தமிழகத்தில் அரசு பேருந்துகள் வழக்கம்போல் இயங்கியதாகவும் திரு. சிவசங்கர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

பெண்களின் பாதுகாப்பையும், மக்களின் நல்வாழ்வையும் உறுதி செய்ய திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் அருகே 17 வயது சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதையும், வள்ளியூர் அருகே வீட்டில் தனியாக இருந்த மூதாட்டி நகைக்காக கொலை செய்யப்பட்டதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

திமுக ஆட்சியில், குழந்தைகள் முதல் முதியோர் வரை பாதுகாப்பற்ற சூழல் உருவாகியுள்ளதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் குறை கூறினார்.

>>>>>><<<<<<

கிராமப்புற சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு தொழில் வளர்ச்சிக்காக வட்டி மானியத்துடன் கூடிய பிணையில்லா கடன் வழங்கப்படவுள்ளதாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

சுயஉதவி குழுவைச் சேர்ந்த பெண் உறுப்பினர்கள் சுயதொழில் தொடங்கி வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளும் நோக்கில் 75 ஆயிரம் ரூபாய் முதல் 10 லட்சம் ரூபாய் வரை கடனுதவி வழங்கப்படவுள்ளது.

உணவு பதப்படுத்தும் தொழில்கள், பண்ணை சாரா தொழில்கள் மற்றும் வியாபாரம் சார்ந்த தொழில்களுக்கு கடனுதவி பெற விரும்புவோர், அந்தந்த பகுதியைச் சேர்ந்த ஊராட்சி அல்லது வட்டார அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் தாங்கள் கணக்கு வைத்திருக்கும் வங்கிக் கிளையை அணுகி விண்ணப்பிக்கலாம் என்றும் மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>>><<<<<<

மதுரை மாவட்டம், விளாச்சேரி கொலு பொம்மைகளுக்கு மத்திய அரசின் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

இந்த அங்கீகாரம், இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உதவிகரமாக இருக்கும் என்று கைவினைக் கலைஞர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

(சவுண்ட் பைட் - ராமலிங்கம் 34 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட — செந்தாமரை 49 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்து துறை பணிகள் குறித்து துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அதிகாரிகளுடன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>><<<<<<

திருவள்ளூர் மாவட்டம், ஆவடியில் 36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிகளை மாநில அமைச்சர்கள் திரு. சேகர்பாபு, திரு. நாசர் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

>>>>>><<<<<<

கன்னியாகுமரி மாவட்ட அரசு மருத்துவமனை கூடுதல் கட்டிட கட்டுமானப் பணிகளுக்கு பால்வளத்துறை அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் இன்று அடிக்கல் நாட்டினார்.

>>>>>><<<<<<

வேலூர் மாவட்டத்தில் முன்னாள் இராணுவத்தினருக்கான குறைதீர் முகாம் இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<<

கிருஷ்ணகிரி மாவட்டம், பாரூர் பெரிய ஏரியிலிருந்து நாளை முதல் 130 நாட்களுக்கு பாசன வசதிக்காக தண்ணீர் திறந்துவிடப்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

நாமக்கல் மாவட்டத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பள்ளிக்கல்வி முடித்த மாணவர்கள் சேர்ந்து பயன்பெறுமாறு ஆட்சியர் திருமதி. துர்கா மூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியாவின் வருண் இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

20 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் 63 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி சுற்றில் அவர் 10-2 என்ற புள்ளிக்கணக்கில் கஸ்கஸ்தானின் Yesbol Shamilov-வை வென்றார்.

87 கிலோ எடைப்பிரிவில் Rohit-ம் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

உலக கோப்பை வில்வித்தைப் போட்டியின் தகுதிச் சுற்று ஆட்டத்தில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் ஜோதி சுரேகா வென்னம், பிரித்திகா, பர்னித் கவுர் அடங்கிய மகளிர் குழு. 230க்கு 226 என்ற புள்ளிக்கணக்கில் இந்தோனேஷியாவை வென்றது.

>>>>>><<<<<<

ஆசிய கோப்பை Wushu போட்டியில் இந்தியா 3 தங்கம், 3 வெள்ளி, 5 வெண்கலப் பதக்கங்களை வென்று, பதக்கப்பட்டியலில் இரண்டாம் இடம் பிடித்தது.

சீனாவில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் பிரிவில் Rajath-ம், மகளிர் பிரிவில் Aparna-வும் தங்கப்பதக்கம் வென்றனர்.

>>>>>><<<<<<

இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Mithesh Rameshwaran – Daksha Bindu இணை 2-வது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-15, 21-15 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியரின் Simanjuntak – Reya இணையை வென்றது.

>>>>>>end<<<<<<